உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 13.05.2026 • மலர் 04 • இதழ்: 133 • Edition : Nagercoil • 13.05.2026 • Vol : 04 • Issue : 133 • Page : 4 • Rs. 5/-

### ஆன்லைன் வழியில் மாணவர்களுக்கான

# கற்பித்தலை தொடங்க வேண்டும்

## பிரதமர் மோடி அறிவுரை

வதோதரா, மே. 13

ஐதராபாத்தில் கடந்த ஞாயிறு அன்று பேசிய பிரதமர் மோடி, பெட்ரோல் டீசல் விலை உலகளவில் கடுமையாக உயர்ந்துள்ளது. பெட்ரோல், டீசல் வாங்குவதற்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியையும் சேமிக்க, அவற்றை சிக்கனமாக பயன்படுத்துவது நம் அனைவரின் பொறுப்பாகும். ஓராண்டுக்கு திருமணத்திற்கு தங்கம் வாங்க வேண்டாம் என்று நான் மக்களுக்கு கோரிக்கை விடுக்கிறேன்.

கடினமான பொருளாதார சூழ்நிலையில் நாட்டின் வளங்களை சேமிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். கொரோனா காலத்தில் வீட்டிலிருந்தே வேலை செய்வது ஆன்லைன் மீட்டிங் மற்றும் வீடியோ கான்பரன்ஸ் போன்ற முறைகளுக்கு மக்கள் எளிதாக பழகி விட்டனர். எரிபொருள் நுகர்வை மிச்சப்படுத்த இதேபோன்ற ஒரு நடைமுறையை மீண்டும் ஊக்கப்படுத்த வேண்டும். சேமிக்கும் ஒவ்வொரு லிட்டர் பெட்ரோல் மற்றும் டீசலும் எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியா அந்நிய செலாவணி செலவிடுவதை குறைக்கும்" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் பள்ளிகள் இணைய வழியில் மாணவர்களுக்கான கற்பித்தலை தொடங்க வேண்டும் என்று பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக

குஜராத் மாநிலம் வதோதராவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "கடந்த சில ஆண்டுகளாக உலகமே அசாதாரண சூழலை எதிர்கொண்டு வருகிறது. முதலில் கொரோனா பெருந்தொற்று, அதன் பின்னர் சர்வதேச அளவில் ஏற்பட்ட பொருளாதார சவால், இப்போது மேற்காசிய போர் பதற்றத்தால் உலக நாடுகள் சவாலை எதிர்கொண்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய நெருக்கடியை கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்தியது. இந்த தசாப்தத்தின் மிகப்பெரிய நெருக்கடியாக மேற்காசிய



போர் நிலவி வருகிறது. நாம் எல்லோரும் இணைந்து எப்படி கொரோனா சவாலை கடந்து வந்தோமோ, அது போல இந்த சவாலையும் நிச்சயம் நாம் கடந்து வருவோம். இதன் பாதிப்பு மக்களுக்கு ஏற்படாத வகையிலான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்ய பல லட்சம் கோடி ரூபாயை இந்தியா செலவிடுகிறது. அதே சமயத்தில் இறக்குமதி பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. அதோடு உலக அளவில் விநியோகசங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த சூழலில் வெளிநாடுகளில் இருந்து வரும் பொருட்களின் பயன்பாட்டை நாம் குறைக்க வேண்டும். நமது அன்றாட வாழ்க்கையில் இந்த பொருட்களை நாம் சார்ந்து இருப்பதை தவிர்க்க வேண்டும். மேலும், அந்நிய செலாவணியில் தொடர்புடைய தனி செயல்பாட்டை தவிர்க்க வேண்டும்.

பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டை நாட்டு மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். மெட்ரோ, பொது போக்குவரத்து, மின்சார வாகனங்கள் போன்றவற்றை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும். அதேபோல் டிஜிட்டல் தொழில்நுட்பம் பல்வேறு விஷயங்களை எளிதானதாக மாற்றியுள்ளது. அந்த வகையில் அலுவலகம் சார்ந்த கூட்டத்தை ஆன்லைனில் விர்ச்சுவல் முறையில் நடத்தலாம்.

வீட்டில் இருந்து பணியாற்றும்நடைமுறையை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பின்பற்றலாம். தங்க இறக்குமதி சார்ந்து அதிகளவிலான தொகையை நம் தேசம் செலவிடுகிறது. அந்த வகையில் இயல்புநிலை திரும்பும் வரை தங்கம் வாங்குவதை மக்கள் தள்ளிப்போடலாம்" என்று அவர் கூறினார்.

## தமிழகத்தில் 717 டாஸ்மாக் கடைகளை மூட முதல்அமைச்சர் விஜய் உத்தரவு




சென்னை, மே. 13

தமிழ்நாட்டில் 4,829 'டாஸ்மாக்' மதுகடைகள் இயங்கி வருகின்றன. மாதம் ரூ.4 ஆயிரம் கோடி அளவுக்கு மது விற்பனை நடைபெற்று வருகிறது. கடந்த நிதி ஆண்டில் மட்டும் மது விற்பனை மூலம் அரசுக்கு ரூ.48 ஆயிரத்து 344 கோடி வருவாய் கிடைத்துள்ளது. அரசுக்கு அதிக வருவாய் ஈட்டி தரும் துறையாக 'டாஸ்மாக்' இருக்கிறது. ஆனால் மதுவால் பல குடும்பங்கள் சீரழிந்து வருவதால், பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து இருந்து வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சி அமைந்துள்ளது. விஜய் முதல்அமைச்சராக பதவியேற்றவுடன். தமிழகத்தில் போதைப் பொருள் பரவலைக் கட்டுப்படுத்தவும், இளைஞர்களைப் பாது காக்கவும் 65 சிறப்பு படைகள் அமைக்கப்படும் என்று ஆணை பிறப்பித்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் 717 டாஸ்மாக் கடைகளை மூட முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி வழிபாட்டு தலங்கள் அருகிலுள்ள 276 கடைகள், கல்வி நிறுவனங்கள் அருகிலுள்ள 186 கடைகள், பஸ்ரெயில் நிலையம் அருகே 500 மீட்டர் தொலைவுக்குள் செயல்படும் 255 'டாஸ்மாக்' கடைகளை 2 வாரங்களுக்குள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

மூடப்படும் கடைகளில் பணியாற்றி வந்த ஊழியர்கள் வேறு கடைகளுக்கு பணி அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் டாஸ்மாக்' பார்களில் சட்டவிரோத மது விற்பனை தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## தங்கம் வாங்காதீர்கள்: மோடியின் அறிவுரை..

### தோல்வியின் சான்றுகள் ராகுல் காந்தி விமர்சனம்



புது டெல்லி, மே. 13

அன்னிய செலாவணியை சேமிக்கும் நோக்கில் திருமணத்துக்கு ஓராண்டுக்கு தங்கம் வாங்க வேண்டாம். எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார். மேற்காசிய போர்நெருக்கடியையொட்டி அவர் இதை தெரிவித்து இருந்தார்.

இதற்கு பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பதிவில் கூறியதாவது:

மோடி அவர்கள் மக்கள் தியாகம் செய்ய வேண்டும் என்று கேட்டு கொண்டார். தங்கம் வாங்காதீர்கள், வெளிநாடுகளுக்கு செல்லாதீர்கள். பெட்ரோல் பயன்பாட்டை குறைத்து கொள்ளுங்கள். உரம் மற்றும் சமையல் எண்ணெய் பயன்பாட்டை குறைத்து கொள்ளுங்கள், மெட்ரோவில் பயணம் செய்யுங்கள். வீட்டிலிருந்தே வேலை செய்யுங்கள்.

இது அறிவுரை அல்ல இது தோல்வியின் சான்றுகள். 12 ஆண்டுகளில் நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார், மக்கள் என்ன வாங்க வேண்டும். என்ன வாங்கக்கூடாது, எங்கே செல்ல வேண்டும். எங்கே செல்லக்கூடாது என்று சொல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஒவ்வொரு முறையும் பொறுப்பை மக்கள் மீது சுமத்திவிட்டு, தங்களது பொறுப்பிலிருந்து தப்பித்து கொள்கிறார்கள். நாட்டை நடத்துவது என்பது இனி ஒரு சமரசம் செய்து கொண்ட பிரதமரால் இயலாத காரியம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தவெகவிற்கு எதிராக வாக்களிப்போம் ஈபிஎஸ் ஆதரவாளர்கள் குழு பேட்டி



சென்னை, மே. 13

சட்டப்பேரவையில் சபாநாயகரை சந்தித்த பிறகு எடப்பாடி பழனிசாமி ஆதரவு எம்.எல்.ஏ. ஓ.எஸ். மணியன், அக்ரி கிருஷ்ண மூர்த்தி கூட்டாக செய்தியாளர்சந்திப்பில் கூறியதாவது:

பல்வேறு சிக்கல்கள் வந்தபோதும் 4 ஆண்டுகளுக்கு சிறப்பான ஆட்சியை வழங்கினார் பழனிசாமி. அதிமுகவை பாதுகாத்தவர் கே.பழனிசாமி. கட்சிக்கு பல்வேறு சோதனைகள் வந்த போது அதனை எதிர்கொண்டு எடப்பாடி வென்றெடுத்தார். மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என தேர்தல் நேரத்தில் பயணம் செய்தார்.

எடப்பாடி பழனிசாமி தான் அதிமுகவின் சட்டமன்ற கட்சித் தலைவர். அதிமுகவின் 47 எம்.எல்.ஏ.க்களும் இதற்கான கையெழுத்து போட்டுள்ளனர்; அந்தக் கடிதத்தை சபாநாயகரிடம் அளித்துள்ளோம்.

திமுகவுடன் அதிமுக கூட்டணி பேசியதாக அவதூறான தவறான தகவலை சி.வி.சண்முகம் கூறியுள்ளார். தங்களது லாபத்திற்காக எம்.எல்.ஏக்களை தங்கள் பக்கம் இழுப்பதற்காக அவதூறு பரப்புகிறார். அமைச்சர் ஆக வேண்டும் என்ற ஆசைக்காக சி.வி.சண்முகம் இவ்வாறு பேசி வருகிறார். அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை அவர்களை இவ்வாறு பேச வைக்கிறது. அதிமுகவின பிளவை முதல்அமைச்சர் விஜய் ஆதரிக்க மாட்டார் என நம்புகிறோம் என்றார்.

அதனை தொடர்ந்து அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறுகையில்,

அதிமுக கொறடா நான் தான். எடப்பாடி பழனிசாமி உத்தரவின் பேரில் சட்டப்பேரவையில் தவெக அரசு மீது நாளை நடைபெறும் நம்பிக்கை கோரும் தீர்மானத்தில் எதிராக அதிமுக வாக்களிக்கும். கட்சியின் உத்தரவுக்கு மாறாக வாக்களிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## அசாம் மாநில முதல்மந்திரியாக ஹிமந்த பிஸ்வ சர்மா பதவியேற்பு



கவுகாத்தி, மே. 13

கடந்த மாதம் 9ந்தேதி, அசாம் சட்டசபை தேர்தல் ஒரே கட்ட மாக நடந்தது. அதில், மொத்தம் உள்ள 126 தொகுதிகளில் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 102 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பா.ஜனதா மட்டும் 82 தொகுதிகளை கைப்பற்றியது.

இதைத்தொடர்ந்து, புதிய முதல்மந்திரியை தேர்ந்தெடுப்பதற்காக, நேற்று முன் தினம் அசாம் தலைநகர் கவுகாத்தியில் பா.ஜனதாஎம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. இதில் தற்போதைய முதல்மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா முதல்மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்திலும் அவர் தேர்வு செய்யப்பட்டார். பின்னர், ஹிமந்த பிஸ்வா சர்மா கவர்னர் லட்சுமண் பிரசாத் ஆச்சாரியாவை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதத்தை அளித்தார். கவர்னர் ஏற்றுக்கொண்டதால் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான புதிய அரசின் பதவியேற்பு விழா குவாஹாட்டியின் கானாபாரா பகுதியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ மைதானத்தில் நடைபெற்றது. பிரம்மாண்டமான விழாவில், கவர்னர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யா, ஹிம்ந்த பிஸ்வ சர்மாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.பதவியேற்புவிழாவில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய மந்திரிகளான அமித்ஷா, ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி, சர்பானந்த சோனோவால், பவித்ரா மார்கரிட்டா, பாஜக ஆளும் மாநிலங்களின் முதல்மந்திரிகள் மற்றும் துணை முதல்மந்திரிகள், பாஜக தலைவர் நிதின் நவீன் ஆகியோரும் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## செவிலியர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்! சீமான்



சென்னை, மே. 13

ஒவ்வொரு ஆண்டும் மே 12ந் தேதி பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையிலும், செவிலியர்களை கவுரவிக்கும் வகையிலும், நோயாளிகளுக்கு செவிலியர்கள் செய்யும் சேவைகளை போற்றும் வகையிலும் 'உலக செவிலியர் தினம்' கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில், உலக செவிலியர் தினத்தை நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செவிலியர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள் தெரிவித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர்வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது, "தன்னலம் கருதாமருத்துவச்சேவையால் மக்களைக் காக்கும் மகத்தான பணி மேற்கொள்ளும் அன்புடை செவிலியர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று அப்பால்நாற் கூற்றே மருந்து' என்ற தமிழ்மறை கூறும் முதுமொழிக்கேற்ப நோயுற்றவருக்கும், நோய் தீர்க்கும் மருத்துவருக்கும் இடையில் பாலமாக திகழ்ந்து, தாயினும் இனிய தன்மையோடு பரிவுடன் பணிவிடைகள் பலசெய்து மருந்துகளைக் காலம் தவறாமல் வழங்குவதோடு, கனிவு மிக்கச் சொற்களால் தானே நோய் தீர்க்கும் அருமருந்தாகவும் திகழ்கின்ற செவிலியத் தாய்களை உலகச் செவிலியர் நாளில் நன்றியுடன் நினைவுகூர்வோம்!"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி விஜய் இன்ஸ்டிடியூட் சார்பில்

# செவிலியர் தின விழா கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி மே13

ஜனவரி 1974இல், நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த நாளான மே 12 ஆம் நாளை சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டு, உலக செவிலியர் நாளை உலக நாடுகளைனைத்திலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. செவிலியர்கள் சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை சிறப்பாக நினைவுகூர இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரியில் உள்ள விஜய் இன்ஸ்டிட்யூட்டில் காமராஜர் கல்வி அறக்கட்டளை சார்பில் உலக செவிலியர் தின விழா கொண்டாடப்பட்டது. விஜய் இன்ஸ்டிட்யூட்டின் நிறுவனர் துரை என்ற துரைசாமி தலைமையில் நடைப்பெற்ற இந்த விழாவின் போது விஜய் இன்ஸ்டிட்யூட்டில் பயிற்சி பெற்று வரும் நர்சிங் மாணவிகளுக்கு உலக செவலியர் தின வாழ்த்தினை தெரிவித்து பூங்கொத்து மற்றும் இனிப்புகளை வழங்கிப் பேசும் போது, இன்று நைட்டிங்கேல் அம்மையாரின் பிறந்தநாளினை செவலியர் தினமாக நாம் கொண்டாடி வருகிறோம்,

இந்த அம்மையாரை போல நீங்களும் தன்னலம் பார்க்காமல் சமூகப்பணிகளில் சிறந்து விளங்கிட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது பேராசிரியை பிரியதர்ஷினி, ஆசிரியர் முகமது ஷரீப், அலுவலர் சத்யா உள்ளிட்ட நர்சிங் பயிற்சி மாணவிகளும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் தமிழ்செல்வன் நன்றி உரையாற்றினார்.

## புலியூர் கிராமத்தில்

# முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா இரவிச்சந்திரன் தலைமையில் கொண்டாடப்பட்டது



கிருஷ்ணகிரி, மே. 13

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றியம்சார்பில் முன்னாள் முதலமைச்சர் அதிமுக கழக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் பிறந்தநாள் விழா இன்றுபுலியூர்கிராமத்தில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இரவிச்சந்திரன் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடி இனிப்புகள் வழங்கப்பட்டது.இதில் ஒன்றிய துணை செயலாளர் சுரேந்தர், மஞ்சுநாத், முருகேசன், பழனி, அகரம் சீனிவாசன், வேடியப்பன், சுரேஷ், ராஜகண்ணப்பன், நாகராஜ், தயாளன், குமார், சரவணன், குமரிநாதன், கலைவாணன், கருணாகரன், நேரு, ரவி, சிவக்குமார், பழனி, வஜ்ரவேல், மாலிக் ஜெய்ஹிந்த், சிவம், கிருஷ்ணன், உள்ளிட்ட கட்சி தொண்டர்கள் உடன் இருந்தனர்.

# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி மே 13

தருமபுரி மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைசேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை ,பஸ் வசதி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்களை அளித்தனர். இந்தக் கூட்டத்தில் பாலக்கோடு பகுதியைச் சேர்ந்த பாரதி ஜனதா நிர்வாகிகள் அளித்த கோரிக்கை மனுவில் பாலக்கோடு நகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடக்கிறது.

இதனால் பெண்கள், பொதுமக்கள் சாலைகளில் சென்று வர அச்சம் அடையும் நிலையில் உள்ளது. இதுபோல சந்து கடைகளில் மது விற்பனை, தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு விற்பனை நடக்கிறது. இதை தொடர்பாக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இருந்தனர். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மொத்தம் 276 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களிடம்இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று ஆய்வு நடத்திய ஆட்சியர் சதீஷ் அந்த மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்த கூட்டத்தில் வருவாய் அலுவலர்கள் கவிதா, சந்திரசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கராஜ் , மக்கள் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழக விவசாய சங்கம் சார்பில் முதல்மைச்சருக்கு வாழ்த்து



கோவை மே:13

புதியதாக தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள சி.ஜோசப் விஜய் அவர்களுக்கு உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதியதாக பொறுப்பேற்றுள்ள அரசாவது விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட வழிவகை செய்யும் என நம்புகிறேன்.

## செங்கம் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வில் கார்த்திக் ராஜா சாதனை



செங்கம் மே:13

செங்கம் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வு எழுதிய மாணவர்களில் செ.கார்த்திக் ராஜா என்ற மாணவர் 532 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தை பெற்றார்.இதில் முதல் மூன்று மாணவர்கள் உயிரியல் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களை ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி சதுர்புஜானந்தர்,பள்ளி நிர்வாக தலைவர் பாண்டுரங்கன்,செயலாளர் ராமமூர்த்தி, தலைமை ஆசிரியர் ஏழுமலை மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

# புதிய முதல்மைச்சரால் கோவையில் 69 ஒயின்ஷாப் கடைகள் மூட உத்தரவு

கோவை மே:13

பொதுமக்கள் நலன் கருதி வழிபாட்டுத்தலங்கள்,கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை இரண்டு வாரத்திற்குள் மூடுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் உத்தரவு பிறப்பித்தார். இதில் கோவை மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகளின் மொத்த எண்ணிக்கை284.வடக்கு156,தெற்கு 128,மொத்தம்284.இதில் வடக்கு48,தெற்கு21,என 69 கடைகள் 15 நாட்களுக்குள் மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதில் உடனடியாக 15571603 1846 மற்றும் 1662 ஆகிய 4 கடைகள் மூடப்பட்டுவிட்டது.குறிப்பு1662 என்ற எண்ணுள்ள கடை சிங்காநல்லூர் பேருந்து நிலையம் எதிர்புறம் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

## விஜய் முதல்வராக இழுபறி நீடித்ததால்

# உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்த தவெக நிர்வாகி சாவு



நாகர்கோவில், மே. 13

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக கட்சி 108 தொகுதிகளில் வெற்றி பெற்றது.. இதையடுத்து காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, இந்திய யூனியன்முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள்கட்சி ஆதரவுடன் தற்போது ஆட்சியை பிடித்துள்ளது.

முதலில் ஆட்சி அமைக்க போதிய ஆதரவு இன்றி இழுபறி நிலை நீடித்ததால் தெவக தொண்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த நிலையில் வள்ளியூர் பகுதி இந்திரா காலனியை சேர்ந்த தவெக வள்ளியூர் ஒன்றிய தொண்டரணி இணை அமைப்பாளரான இசக்கியப்பன் (43) என்பவர் ஜோசப் விஜய் ஆட்சி அமைக்கமுடியாதஇழுபறிநிலையால்மனமுடைந்த நிலையில் இருந்தார். கடந்த 9ம் தேதி பழவூர் விஸ்வநாதபுரம் சோதனை சாவடி அருகே இசக்கியப்பன் தனது உடலில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து தற்கொலைக்கு முயன்றார். அங்கிருந்த போலீசார் மற்றும் பொதுமக்கள் உடனடியாக அவரை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த இசக்கியப்பன் நேற்று காலை உயிரிழந்தார். இந்த சம்பவத்த தொடர்பாக பழவூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இறந்த இசக்கியப்பன் தொடக்க காலத்தில் இருந்து விஜய் ரசிகர் மன்றத்தில் இருந்து வந்தவர்.



செங்குன்றத்தில் கடந்த 37 ஆண்டுகளாக தரத்திலும், நம்பிக்கையிலும், முதலிடம் பெற்று பொதுமக்களின் நம்பிக்கையையும் பாராட்டையும் பெற்று வரும் நியூ மணி டெக்ஸ்டைல்ஸ் தற்போது மூன்றாவது புதிய கிளையாக திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை சிக்னல் அருகில் மிகப்பிரமாண்டமாக திறக்கப்பட்டது. கடையின் உரிமையாளர் டேவிட் ராஜ், சோனியா வருகை தந்த அனைவரையும் வரவேற்றனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி ஜே எஸ். கோவிந்தராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மலர்ச்சி தொண்டு நிறுவனம் பரமன் பச்சைமுத்து, கலந்து கொண்டார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்கள் வாங்குவோருக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும் என்று கடை மேலாளர் பேட்ராஜ், தனன்ஜெயன் கூறினார்.

## திருப்பூர் அருகே பல்லடத்தில்

# பள்ளி பேருந்துகள் பள்ளி வாகனங்கள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு

திருப்பூர்:மே13

திருப்பூர்மாவட்டத்தில் உள்ள 232 பள்ளிகளில் உள்ள 1412 பள்ளி பேருந்துகள், பள்ளி வேன்கள் உள்ள முதலுதவி பெட்டி, தீயணைப்பான் கருவி, அவசரகால கதவு (Emergency Exit) மற்றும் வேகக் கட்டுப்பாட்டு கருவி ஆகியவை சரியாக உள்ளதா என அதிகாரிகள் ஆய்வு.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே மாதப்பூரில் மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சார்பில் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டது.

இதில்திருப்பூர்வடக்கு, திருப்பூர் தெற்கு, காங்கேயம் பல்லடம் அவிநாசி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 232 பள்ளிகளில் உள்ள 1412 பள்ளிபேருந்துகள், பள்ளி வாகனங்கள் அவசர வழி கதவுகள், முதலுதவி சிகிச்சை பெட்டிகள், பிரேக், டயர்கள், ஜன்னல் கம்பிகள் மற்றும் படிக்கட்டுகளின் உயரம் ஆகியவை விதிகளின்படி இருக்கின்றதா எனவும்

அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் உள்ளனவா எனவும் பள்ளி வாகனங்களுக்குள் சென்று மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே, வடக்கு வட்டார அலுவலர் பொறுப்பு பாஸ்கர்,தெற்கு வட்டார அலுவலர் முழு கூடுதல் பொறுப்பு .பழனியப்பன் உதவி வட்டார அலுவலர்கள். உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டார்,சிறிய குறைபாடுகள் உள்ள 10 பள்ளி வாகனங்கள் குறைபாடுகளை சரி செய்த பின்னர் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து அனைத்து வாகன ஓட்டுநர்கள் முன்பு பேசிய ஆட்சியர் மணிஸ் நாரணவரே வாகன ஓட்டுனர்கள் அனைவரும் கண் பரிசோதனை செய்து கொண்டு உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும்அவர்பள்ளி ஓட்டுனர்களுக்கு அறிவுரை வழங்கி வலியுறுத்தினார். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளை சேர்ந்த பள்ளி வாகனங்கள் பங்கேற்றனர்.

# கொடுமுடி பகுதியில் ஈரோடு ஆட்சியர் கந்தசாமி ஆய்வு



ஈரோடு மே 13

ஈரோடு மாவட்டம் கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம். கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், நஞ்சை கொளாநல்லி ஊராட்சியில் 15 வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் தூசு நீக்கும் இயந்திரத்தினைக் கொண்டு சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளில் உள்ள இதர தூசு மற்றும் குப்பைகளைஅகற்றப்பட்டு வருவதையும், அதன் செயல்பாடுகளையும் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கொடுமுடி ஊராட்சி ஒன்றியம். இச்சிப்பாளையத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் லட்சுமிபுரம் முதல் குமரப்பபுரம் வரை சாலையோரப்பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதையும், அங்குள்ள மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விடும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.தொடர்ந்து. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் வள்ளி பள்ளி முதல் இச்சிப்பாளையம் எஸ். பி.பி. கால்வாய் கரையோரப்பகுதியில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விடும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கொடுமுடி பேரூராட்சி, மீனாட்சி ஹரன் நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தில் பராமரிக்கப்படும் அரசு போட்டித்தேர்வுகளுக்கான நூல்கள். பிற நூல்கள், தினசரி வருகை தரும் வாசகர்கள் மற்றும் அரசு தேர்வுகளுக்கு பயில்பவர்கள் விபரம், குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கமணி. அம்புரூஸ், கொடுமுடி பேரூராட்சி செயல் அலுவலர் விஜயன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர் .

# தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த பயிற்சி பெற்ற 'யுவ ஆப்தமித்ரா' பயிற்றுநர்களுக்கு பாராட்டு



தஞ்சாவூர் மே 13

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் வேலூரில்பயிற்சிபெற்ற யுவ ஆப்தமித்ரா முதன்மை பயிற்று நர்களை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பாராட்டினார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நாடு முழுவதும் அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடிய மற்றும் பேரிடர் அபாயம் நிறைந்த மாவட்டங்களில் தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டம், மை பாரத், சாரண சாரணியர்கள் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த தன்னார் வலர்களுக்கு யுவ ஆப்தமித்ரா திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப் படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து ஆப்தமித்ரா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற நான்கு முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் மை பாரத் அமைப்புகளில் சார்ந்த முதன்மை பயிற்றுநர்கள் திட்டத் தின் கீழ் வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தில் மே 5 ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை பேரிடர் மேலாண்மை குறித்து பயிற்சியை பெற்றனர்.

இப் பயிற்சி பெற்ற தஞ்சாவூர் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள் மாவட்ட கலெக்டர்பிரியங்கா பங்கஜி திட்டம் சான்றுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க.வுக்கு ஆதரவு;

# அ.ம.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட எம்.எல்.ஏ. காமராஜ் பேட்டி



சென்னை மே. 13

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், மன்னார்குடி தொகுதியில் போட்டியிட்ட அ.ம.மு.க. எம்.எல்.ஏ. எஸ்.காமராஜ், தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவை வீழ்த்தி வெற்றி பெற்றார். இந்த சூழலில், இன்று காலை சட்டமன்றம் கூடிய போது, த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளிக்கிறேன் என அ.ம.மு.க. எம்.எல்.ஏ. காமராஜ் அவையில் பேசியது சர்ச்சையானது. இந்த நிலையில், அவரை கட்சியில் இருந்து நீக்கி டி.டி.வி. தினகரன் அறிவிப்பு வெளியிட்டு உள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுஉள்ளசெய்தியில், அ.ம.மு.க. எம்.எல்.ஏ. எஸ்.காமராஜ், கட்சியின் நிலைப்பாட்டை மீறி சட்டமன்றத்தில் தன்னிச்சையாக த.வெ.க.வுக்கு ஆதரவாக செயல்பட்டு உள்ளார். அவருடைய வெற்றிக்காகஅ.ம.மு.க. தொண்டர்களும், கூட்டணி கட்சியினரும் பாடுபட்டனர்.

அவர், கட்சியின் கொள்கை குறிக்கோள்கள், கோட்பாடுகளுக்கு முரணாக செயல்பட்டதற்காக நீக்கப்படுகிறார். கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்பட அனைத்து பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யப்படுகிறார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், அ.ம.மு.க. கட்சியில் இருந்து எம்.எல்.ஏ. காமராஜ் நீக்கம் செய்யப்பட்டது பற்றி செய்தியாளர்களிடம் அவர் இன்று அளித்த பேட்டியின் போது, சட்டமன்றத்தில் முதல் அமைச்சரை புகழ்ந்து பேசியது தவறா? என கேட்டார். என் மீது கட்சி நடவடிக்கை மேற்கொண்டால் அதுபற்றி கவலை இல்லை. மன்னார்குடி தொகுதி மக்களுக்கு திட்டங்கள் சென்று சேர வேண்டும் என்று கூறினார். நம்பிக்கை வாக்கெடுப்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன? என கேட்டதற்கு, த.வெ.க.வுக்கு ஆதரவு தருவேன் என்று கூறினார்.

சட்டமன்றத்தில் இன்றைய தினம் காலையில் அவர் பேசும்போது, இந்த ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். நிச்சயம் ஒரு நல்ல அரசை முதல் அமைச்சர் விஜய் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. முதல் அமைச்சரால்தான் தமிழகத்திற்கு நல்ல ஆட்சியை தர முடியும். நீங்கள்கையெழுத்திட்ட 3 திட்டங்களும் தமிழகத்திற்கு நன்மை ஏற்படுத்தும். நீங்கள் நல்லாட்சியை தர வேண்டும். தமிழக இளைஞர்கள் உங்களை நம்புகிறார்கள். நாங்களும் உங்களை நம்புகிறோம். உங்களை நான் பாராட்டுகிறேன் என்று கூறினார்.



## திமுக கூட்டணியில் இருந்து

# காங்கிரஸ் தவெகவிற்கு மாறியதால் வேலூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் பேட்டி

வேலூர் மே:13

வேலூர்மாவட்டம்,வேலூரில் உள்ள காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திமுக கூட்டணியில் இருந்த போது மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவராக கிருஷ்ணவேணி பதவி வகித்து வந்தார் இன்று செய்தியாளர்களை சந்தித்த கிருஷ்ணவேணி தான்திமுககூட்டணியில் இருந்த போது திமுக கவுன்சிலர்களின் ஆதரவோடு மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவராக தேர்வு செய்யப்பட்டதாகவும் தற்போது திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறி தமிழக வெற்றி கழகத்தின் கூட்டணியில் சேர்ந்ததால் திமுகவால் வெற்றி பெற்ற மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் பதவியை மட்டும் ராஜனாமா செய்கிறேன் ஆனால் மாவட்ட கவுன்சிலராக தொடருவேன் ராஜனாமா கடிதத்தை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கவுள்ளதாகவும் கூறினார் இந்த பேட்டியின் போது காங்கிரஸ் மாவட்டத்தலைவர் சுரேஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்



# கருங்கல் மற்றும் களியக்காவிளை பஸ் நிலைய பணிகள்: கலெக்டர் ஆய்வு

மார்த்தாண்டம், மே.13

கருங்கல் தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 202425 ன் கீழ் கருங்கல் பேருந்து நிலையம் மேம்பாடு செய்ய ரூ.5.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் அழகு மீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த பணியை 30 தினங்களுக்குள் செய்து முடித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், ஒப்பந்ததாரர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த திட்டத்தீன் மூலம் சுமார் 7000 மக்கள்தினசரி பயனடைவார்கள். எனவே இப்பணிகளை துரிதமாக மேற்கொள்வதோடு, கட்டுமான பணிகள் தரமானதாகவும், உறுதி தன்மையினை உறுதி செய்திட ஒப்பந்ததாரர் மற்றும் துறை சார்ந்தஅலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து களியக்காவிளை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 2024 2025ம்வருடம்கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 9.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்தபேருந்து முனையம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது மேற்கூரை பணிக்கான தூண்கள் அமைக்கும் பணி விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும், சுவர்களில் பூச்சு பணி செய்யவும், களியக்காவிளை மீன் சந்தையிலிருந்து வரும் கழிவுநீர் வடிகாலை சீரமைக்கவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் கட்டுமான பொருட்களுக்கான பற்றாக்குறை சரி செய்து கொடுக்க உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர்கள் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கவும், விரைந்து பேருந்து நிலைய பணிகள் முடித்து களியக்காவிளை பேருந்து நிலையம் திறப்புவிழாவிற்கு ஆயத்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

நடைபெற்ற ஆய்வுகளில் உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) பாண்டியராஜன், செயல் அலுவலர்கள் சத்யதாஸ் (கருங்கல்), சந்திரகலா (களியக்காவிளை), கருங்கல் தேர்வுநிலை பேரூராட்சி தலைவர் சிவராஜ், இளநிலை பொறியாளர், பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## வினாத்தாள் கசிவு புகார்:

# 3ந்தேதி நடந்த நீட் தேர்வு ரத்து

புதுடெல்லி, மே. 13

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில்சேருவதற்கு'நீட்'நுழைவுத்தேர்வுஅவசியம். இந்ததேர்வைதேசியதேர்வுமுகமைஒவ்வொருஆண்டும் நடத்தி வருகிறது. அதன்படி, 202627ம் கல்வியாண்டில் மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கான நீட் நுழைவுத்தேர்வு கடந்த 3ந்தேதி நாடு முழுவதும் 552 நகரங்களிலும், துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் 14 இடங்களிலும் என மொத்தம் 5,432 தேர்வு மையங்களில் நடைபெற்றது. இந்த நீட் தேர்வை நாடு முழுவதும் சுமார் 22.80 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர்.

இந்த நிலையில் நீட் தேர்வு வினாத்தாள் பல்வேறு இடங்களில் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே கசிந்ததாக புகார் எழுந்தது. இதைத் தொடர்ந்து கடந்த 3ந்தேதி நடைபெற்ற நீட் நுழைவுத்தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வு மீண்டும் நடைபெறும் என்றும், தேர்வுக்கான புதிய தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் வினாத்தாள் விற்பனை தொடர்பான புகார்களை சிபிஐ விசாரிக்க தேசிய தேர்வு முகமை பரிந்துரை செய்துள்ளது. மேலும் சிபிஐ விசாரணைக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் தேர்வு முகமை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுதேர்வுக்கு மாணவர்கள் புதிதாக விண்ணப்பிக்க தேவையில்லை என்றும், கூடுதல் கட்டணம் எதுவும் கட்ட தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும்நீட்தேர்வுக்காகமாணவர்கள்ஏற்கெனவேகட்டிய தேர்வு கட்டணமும் திருப்பி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 8ம்தேதி பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## தஞ்சாவூரில் மே 14ந்தேதி

# விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்: கலெக்டர் தகவல்



தஞ்சாவூர் மே 13

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயி கள் குறைதீர்க்கும் கூட்டம் மே 14 ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது இதுகுறித்து மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் மேலும் தெரிவித்திருப்பதாவது

இந்த கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் வேளாண்மை,தோட்டக்கலைத்துறை,நீர்ப்பாசனம், வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கால்நடை ,கூட்டுறவு ,மின்சாரம் போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை தெரிவிக்கலாம்.

இதில் கருத்துகளை தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை மே 14ஆம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும் .விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து, ஒப்புதல் பெற்று பின்னர் அளிக்க வேண்டும்

## தூத்துக்குடி அரசு இசைப் பள்ளியில்

# மாணவர் சேர்க்கை தொடக்கம்: விண்ணப்பங்கள் வரவேற்பு

தூத்துக்குடி, மே. 13

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் விஜூ மகாஜன் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டு துறையின் கீழ் தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உயர் கல்வியில் சேர்க்கை பெறும் பொருட்டு 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளுக்கு இணையான சான்றிதழ் வழங்கப்படும். இசைப்பள்ளியில் 3 ஆண்டுகள் படித்து முடித்த மாணவர்கள் இசைக் கல்லூரிகளில் நேரடியாக பட்டயப் படிப்பில் 3ம் ஆண்டு சேரலாம். அனைத்து மாணாக்கர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த பள்ளியில் பாரம்பரிய கலைகளான குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம்,வயலின்,மிருதங்கம்ஆகியகலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பள்ளி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை முழுநேரப் பள்ளியாகும். 13 வயது முதல் 25 வயது வரை உள்ள ஆண், பெண் இருபாலரும் சேரலாம்.

பயிற்சி காலம் 3 ஆண்டுகள். பயிற்சி முடிவில் தமிழ்நாடு தேர்வுத் துறையால் தேர்வு நடத்தி அரசுத் தேர்வுகள் இயக்குநரால் இசைப் பள்ளி தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி கட்டணம் ஏதுமில்லை. சிறப்பு கட்டணமாக ஆண்டிற்கு ரூ.350 மட்டும் செலுத்த வேண்டும். மாணவ, மாணவியருக்கு நகரப் பேருந்தில் இலவச பேருந்து பயணச்சலுகை உண்டு. தமிழகத்தின் பாரம்பரியமிக்க கலைகளை பயிலுவதற்கு உரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள மாணவ, மாணவிகள் இந்த பள்ளியில் சேர்ந்து பயன்பெறுமாறுதெரிவிக்கப்படுகிறது.இந்தபள்ளியில் சேர விரும்புவோர் உடனடியாக தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப் பள்ளி, டி.சவேரியார்புரம், மேலூர், சிலுவைப்பட்டி அஞ்சல், தூத்துக்குடி என்ற முகவரியிலோ அல்லது 9487739296 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். மே 12ம் தேதி முதல் 20262027ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், இச்சிப்பாளையத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வள்ளிபள்ளி முதல் இச்சிபாளையம் எல்பிபி வாய்க்கால் கரையோரப்பகுதியில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விடும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு, விபத்து சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருந்து பொருட்களின் இருப்பு, நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள், மருத்துவ உபகரணங்களின் செயல்பாடுகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன், இணை இயக்குநர் (நலப்பணிகள்).மோகன பானு, ஊத்தங்கரை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் .எழிலரசி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், மாதப்பூரில் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் 2026ம் ஆண்டுக்கான தனியார் பள்ளி வாகனங்கள் கூட்டாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாநகர போக்குவரத்து காவல் துணை ஆணையர் ராஜராஜன் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர்சிவபிரகாஷ்,வட்டாரபோக்குவரத்துஅலுவலர்கள்பாஸ்கர்,பழனியப்பன் ஆகியோர் உள்ளனர்



திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தார் ஊராட்சி ஒன்றியம், செஞ்சி ஊராட்சி பனப்பாக்கம் கிராமத்தில் இருளர் குடியிருப்பு பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக பி.எம்.ஜென்மேன் (PMJANMAN) திட்டத்தின் கீழ் 47 வீடுகளும் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டங்களின் கீழ் 15 வீடுகளும் ஆக மொத்தம் ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 62 வீடுகளின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப். நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடிக்க சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் உதவி செயற்பொறியாளர் கோவேந்தன். கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி(வ.ஊ) மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்

### வட மாநில தொழிலாளர்களை கண்டித்து ஆர்ப்பாட்டம்

# அனுமதி கோரி காவல் ஆய்வாளரிடம் நாம் தமிழர் தொழிற்சங்க பேரவை மனு



திருப்பூர், மே.13

மே 13 அன்று வட மாநில தொழிலாளர்களால் தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்து திருப்பூர்பாண்டியன்நகரில்நாம்தமிழர்தொழிற்சங்கம்பேரவைசார்பாக ஆர்ப்பாட்டம் திருப்பூரில் வட மாநில தொழிலாளர்களால் தமிழர் தாக்கப்படுவதை தடுக்க, வடமாநிலத்தவரின் ஆதிக்கத்தை தடுக்க, வடவர்கள் வருகையை நெறிப்படுத்த மே 13ம் தேதி அன்று பாண்டியநகர் பகுதியில் ஆர்பாட்டம் நடத்த அனுமதி கோரி நாம் தமிழர் பின்னலாடை மற்றும் நூற்பாலை தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில இணை செயலாளர் கொ.மு. சுரேஷ்பாபு அவர்கள் தலைமையில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் தொழிற்சங்கத்தினர் திருப்பூர் 15 வேலம்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் திருமுருகன் பூண்டி காவல் ஆய்வாளர் ஆகியோரிடம் மனு அளித்தனர் அந்த மனுவில் கூறியிருப்பதாவது 11.5 26 திங்கள் அன்று திருப்பூர் செட்டிபாளையம் இந்திரா நகர் பேருந்து நிலையம் அருகில் அந்த பகுதியை சேர்ந்த ஜெகதீஷ் என்பவர் நின்று நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்த நிலையில் அங்கு இருந்த வட மாநில தொழிலாளர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் இதில் ஜெகதீஷ் மண்டை உடைந்தது காயமடைந்த நிலையில் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இதை கண்டித்து நாம் தமிழர் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்த மே 13 மாலை 5 மணி முதல் 7 மணி வரை பாண்டியன் நகர் பேருந்து நிறுத்தத்தில் ஆர்பாட்டம் நடத்த அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது

# அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகியை தலைவர் ஜி.கே. விவசாய மணி நியமித்தார்




திருப்பூர், மே. 13

அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் கலந்தாய்வு கூட்டம் திருப்பூர் பிரிட்ஜ்வே காலனியில் உள்ள சங்க தலைமை செயலகத்தில் நடைபெற்றது கலந்தாய்வு கூட்டத்தில் சங்க நிறுவன தலைவர் ஜி.கே.விவசாய மணி (எ)ஜி.சுப்பிரமணியம் அவர்கள் திருப்பூர் அவிநாசி மேற்கு ஒன்றிய அமைப்பாளராக எஸ். பாலகுமார் அவர்களை நியமனம் செய்தார் அவர்களுக்கு தலைவர் அவர்கள் பச்சை துண்டு அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சங்க நிர்வாகிகள் புதிய நிர்வாகிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்

# ஜெயலலிதா நினைவிடத்தில் சி.வி.சண்முகம் தரப்பு மரியாதை



சென்னை, மே.13

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் புதிதாககளம்இறங்கியதமிழகவெற்றிக்கழகம்ஆட்சியை பிடித்து முதல்அமைச்சராக விஜய் பதவியேற்று விட்டார்.

இந்த தேர்தலில் ஆட்சியை பிடித்து விடலாம் என்ற எண்ணத்தோடு களமிறங்கிய அ.தி.மு.க. 47 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. அதுமட்டுமின்றி அந்த கட்சி 3வது இடத்தை பிடித்ததால் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் சட்டசபையில் இழந்தது.

இந்ததோல்விக்குஎடப்பாடிபழனிசாமிபொறுப்பேற்று, பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று அக்கட்சியினர் பலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அதுமட்டுமின்றி சட்டசபை தலைவராகவும் எஸ்.பி. வேலுமணியை நியமிக்க வேண்டும் என்று ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர். இது தொடர்பாக இரு தரப்பினரும் அதிமுக சட்டமன்ற தலைவராக எங்களை நியமிக்க வேண்டும் பெரும் ஆதரவு எங்களுக்கு தான் உண்டு என்று சபாநாயகரை சந்தித்து மனு அளித்தனர்.

இந்தநிலையில், அதிமுக இரண்டாக பிரிந்துள்ள நிலையில், எஸ்.பி.வேலுமணி அணியினர் மெரினாவில் உள்ள மறைந்த முதல்அமைச்சர் ஜெயலலிதா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

சி.வி.சண்முகம் தலைமையில் அதிமுக எம்.எல்.ஏக்கள் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் உடனான சந்திப்பு நிறைவடைந்த நிலையில் மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# 717 மதுபானக் கடைகள் மூடப்படுவது வரவேற்பிற்குரியது: மு. வீரபாண்டியன்

சென்னை, மே. 13

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய், தலைமையிலான அரசு தமிழக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிப்படி, போதையில்லா தமிழகத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் படி போதை பொருள் தடுப்பு சிறப்புப்படை, சிங்கப் பெண் சிறப்புப்படை அமைக்கப்பட்டிருக்கிறது.

அதோடு, வழிபாட்டுத்தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டருக்குள் அமைந்திருக்கும், 717 டாஸ்மாக் மதுபானக்கடைகளை,

இரண்டு வார காலத்திற்குள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மாதர், இளைஞர், மாணவர் அமைப்புகளும் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வந்துள்ளன. இந்நிலையில், தவெக அரசின் இத்தகைய நடவடிக்கைகள் வரவேற்பிற்குரியது.

அதே சமயம், டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படும் பகுதிகளில் செயல்படும் எஃப் எல் 2 மதுபானக் கடைகள் உட்பட மனமகிழ் மன்றங்களில் மதுபானங்கள் விற்பனை நடப்பதன் மீது அரசின் நடவடிக்கை என்ன என்பது குறித்து அரசாணையில் தெளிவாக குறிப்பிடவில்லை. அவைகளும் மூடப்பட்டால்தான் அரசின் நோக்கம் நிறைவேறும். இந்த மதுபானக் கடைகள் மூடப்படுவதுடன், படிப்படியாக முழுமையான மது விலக்கை அமல் படுத்தும் திசைவழியில் அரசு செயல்பட வேண்டும். மதுபானக் கடைகள் மூடப்படும் நிலையில் கள்ளச்சாராயம், விஷசாராயம் விற்பனை தலைதூக்கும் நிலை உருவாகாமல் தடுப்பதற்கு அரசு விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும். உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதே போன்று, குடிநோய் மற்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை, அப்பழக்கங்களிலிருந்து மீட்பதற்கான இலவச சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை மாவட்டந்தோறும் உருவாக்கிட வேண்டும்.

மேலும், மூடப்படும் டாஸ்மாக் கடைகளில் கடந்த 2003 ஆம் ஆண்டில் இருந்து 23 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் சுமார் 3500 டாஸ்மாக் பணியாளர்கள் வேலை வாய்ப்பையும், அவர்களது குடும்பங்கள் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்ய வேண்டும். இக்கடைகள் மூடப்படுவதற்கு முன்பாக அரசின் பிறத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களில் அவர்கள் பணிநியமனம் செய்யப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்களையும், தமிழ்நாடு அரசையும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம்
கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு.
22751/2025
நாள் :11.05.2026

தர்மதுரை S/o. ராஜாமணி,
ஜகொத்தப்பள்ளி கிராமம்,
மஜித்கொல்லஹள்ளி அஞ்சல்,
பருகூர் வட்டம், கிருஷ்ணகிரி
மாவட்டம்.
...மனுதாரர்

வட்டாட்சியர்
பருகூர்
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது தாத்தா பெரிய அர்ச்சுணன் என்பவர் கடந்த (1991-1995)ம் தேதியில் ஜகொத்தப்பள்ளி கிராமம், மஜித்கொல்லஹள்ளி அஞ்சல், பருகூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். என்ற முகவரியில் இறந்துவிட்டார். அவரது இறப்பு அப்போது பதிவு செய்யப் படவில்லை. இந்நிலையில் பட்டா மாற்றம், மின் இணைப்பு மாற்றம் ஆகிய காரணத்திற்காக அவரது இறப்பு சான்று தேவைப்படுவதால் மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிடக் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாச்சியர் அலுவலர்களிடம் மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் 15 நாட்களுக்குள் தாங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தர்மதுரை
மனுதாரர்

### நாட்றம்பள்ளி அன்னை தெரேசா இன்ஸ்டியூட் ஆஃப் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில்

# செவிலியர் தினத்தை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடிய செவிலியர்கள்



திருப்பத்தூர், மே 13

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி தாலுக்கா சாமுண்டீஸ்வரி நகரில் அமைந்துள்ள அன்னைதெரேசாஇன்ஸ்டியூட் ஆப் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி அன்னை தெரேசா இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் கல்லூரி கல்லூரி நிறுவனர் சரஸ்வதி தலைமையில் நாட்றம்பள்ளி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் மனோஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும் பேரணி நாட்றம்பள்ளிபேருந்து நிலையத்தில் பேரணி துவங்கி கடைவீதி, பேரூராட்சி அலுவலகம், காவல் நிலையம் வழியாக கல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பேரணியில் தன்னலமற்ற சேவை செவிலியர்களின் கர்வமே, நோயாளிகளில் சிரிப்பில் செவிலியர்களின் சேவை, துரித உணவுகளை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம், சுத்தம் கருணை சேவை செவிலியர்களின் அடையாளங்கள், சாலை விதிகளை பின்பற்றுவோம் கோர விபத்துகளை தவிர்ப்போம், தீண்டாமையை உழைப்போம் பேன்ற பதாகை ஏந்தி கல்லூரி வரை பேரணி நடைபெற்றது.

உடன் கல்லூரி ஆசிரியர்கள் புனிதா, கலைவாணி, ஜனனி, காந்திமதி மற்றும் லோகேஷ் கல்லூரி மாணவ மாணவிகள் 200க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து கல்லூரியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக நாட்றம்பள்ளி இந்தியன் வங்கி கிளை மேலாளர் ராஜசேகர், மருத்துவர்கள் மணிகண்டன், முகமது ஆசிப், குமரேசன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்பு அழைப்பாளர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

### சென்னை பையனூரில் உள்ள

# அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நிறைவு நிகழ்வு




சென்னை, மே. 13

சென்னை பையனூரில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நிறைவு நிகழ்வு.

விநாயகா மிஷனின் சென்னை பையனூரில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் மாணவப் பேரவை அமைப்பு மற்றும் நுண்கலை அமைப்பின்மூலம் விளையாட்டு விழா நிறைவு நிகழ்வு மற்றும் ஆண்டுவிழா பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர்கணேசன் அவர்களின் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

முன்னதாக கல்லூரியின் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவின் நிறைவு விழாவிற்கு வருகை புரிந்திருந்தோரை கல்லூரியின் பொறுப்பு இயக்குனர் முத்துராஜ் அவர்கள் வரவேற்று பேசினார்.

கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார்அவர்கள்முன்னிலை வகித்து தலைமை உரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளராக காவல்துறை இணை கண்காணிப்பாளர் அறிவழகன் மாமல்லபுரம் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். மேலும் பேராசிரியர் தமிழ் சுடர் அவர்கள் கலந்து கொண்டு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து மாணவர்களை ஊக்கப்படுத்தினார்

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விளையாட்டுவிழாவின்நிறைவு விழாவின் கலாச்சார கலை நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளர்களாக திரைப்பட பாடகர்கள் அரவிந்த் மற்றும் ரேஷ்மா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், பரிசுகள் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் நுண்கலை அமைப்பின் ஆலோசகர்கள், நந்தினி, மாணவ பேரவை அமைப்பின் ஆலோசகர்கள், பானு, வசந்த் குமார், மற்றும் உடற்கல்வி இயக்குனர் வருண் குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



சேலம் கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய "வள்ளுவர் மறை வைரமுத்து உரை " எனும் நூலை டி.ஜே.ஏ தேசியப் பொருளாளர் ஸ்ரீகுரு அவர்களுக்கு உயிர்மெய்த்தமிழ்ச் சங்கம்,உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் மாநிலத்தலைவர் சேலத்து பாரதி சொல்லரசர் வழங்கினார்.அருகில் கவிஞர் புகழேந்தி உள்ளார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.